**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **P.W.1** | **பெயர் : எவிட்டா ராணி**<br>**க/பெ: இம்மானுவேல் தயாளந்தன்** | **OS.No.25/2024** | **18.02.2026** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 2 மற்றும் 3 ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை)

**2 மற்றும் 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் வரைபடமானது **புல எண்.122 க்கான மாதிரி** வரைபடம் என்று சொன்னால் சரிதான், மேற்படி **வரைபடமானது இந்நீதிமன்றத்தால் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் கணவருக்கு மா.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் 0.21.00 ஏர்ஸ் (51.87 செண்ட்) பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி இடத்தில் மா.வா.சா.ஆ.2 மூலம் எனது கணவர் எனக்கு 0.18.22 ஏர்ஸ் (45 செண்ட்) கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். மீதம் உள்ள இடமான 6.87 செண்ட் இடத்தை என் கணவர் இம்மானுவேல் ஸ்டீபன் என்பவருக்கு கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி இடமானது சர்வே எண்.122/1B1B உட்பிரிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். இம்மானுவேல் ஸ்டீபன் என்பவர் மேற்படி அவர் இடத்தை அளக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ரிட் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி ரிட் மனுவின் உத்தரவு படி வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் அலுவலர் மற்றும் சர்வேயர் இடத்தை அளந்தார் என்று சொன்னால் சரிதான், அப்போது நான் ஏதாவது ஆட்சேபணை தெரிவித்தேனா என்று சொன்னால் இல்லை. இம்மானுவேல் ஸ்டீபன் கிரையம் பெற்ற இடமானது எனது இடத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தபசில் சொத்திற்கு கிழக்கு பக்கத்திலும் சர்வேயர் அளவீடு செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி ரிட்


SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.02.18 19:45:54 +0530

வழக்கின் விவரத்தை நான் வேண்டுமென்றே நான் பிராதில் கூறாதிருந்து தற்போது 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.02.18 19:46:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.